**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure) In the Court of**
**Additional District & Sessions Judge(PCR),**
**III Additional District & Sessions Court (PCR), Madurai.**

| | |
|---|---|
| **Special Sessions Case No.** | **– 145/2021** |
| **Deposition of witness for** | **– PW. 12 (LW. 14 )** |
| **Name** | **– திரு. சாமியப்பன்** |
| **Father's / Husband's Name** | **–பால்பாண்டி** |
| **Village** | **–** |
| **Taluk** | **–** |
| **Caste** | **–** |
| **Calling** | **–** |
| **Religion** | **–** |
| **Age** | **–** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.06.2026.**

(1,2ம் எதிரிகள் ஆஜரில்லை, U/s. 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**விசாரணை தொடங்கிய நேரம் 11.34**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 28.07.2020ம் தேதியன்று இரவு 20.30 மணிக்கு நான் ஆஸ்டின்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து நிலைய பொறுப்பில் இருந்தபோது தனக்கன்குளம் பிஆர்சி காலனி, சிலோன் காலனி, ஜெயகுமார் மகன் வில்லவநாதன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 983/2020 பிரிவு 294(b), 323, 506(ii) IPC & 4 of TNPHW & 3(1)(r), 3(1)(s) , 3(2)(va) of SC/ST Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். காயம்பட்டிருந்த வில்வநாதன் மற்றும் நர்மதா ஆகிய

இருவரையும் திருப்பரங்குன்றம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். அதன் பின் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கும் நகலை திருமங்கலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர்கள் அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அசாஆ– 8 ஆகும். இது தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. முதல் தகவல் அறிக்கையில் மூன்று எதிரிகளின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை 30.07.2020ம் தேதியன்று காலை 10.15 மணிக்குதான் நீதிபதியால் கையெழுத்திட்டு பெறப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. இதே சம்பவம் குறித்து இந்த வழக்கிற்கு எதிர் வழக்காக குற்ற எண் 984/2020 பிரிவு 341, 294(b), 323, IPC ன் கீழ் இவ்வழக்கின் வாதி தரப்பினருக்கு எதிராக ஆஸ்டின்பட்டி காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் கட்டை என நுழைத்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் வாதியின் புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தினத்திற்கு மறுநாள் காலை 11 மணியளவில் காவல் நிலையத்திற்கு வந்த வாதி கொடுத்த வாக்குமூலத்தை நான் பெற்று அதன் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் பதிவு

**செய்த முதல் தகவல் அறிக்கை இந்த வழக்கிற்கு பாதகமாக இருந்ததால் அதனை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை:</u> இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மூன்றாவது கூடுதல் நீதிமன்றம்(பி.சி.ஆர்), மதுரை